# இணைப்பு-1

## பத்திரிக்கை செய்தி

அரியலூர் மாவட்டத்தில் குடும்பம் மற்றும் பொது இடங்களில் வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு தேவைப்படும் அவசரகால மீட்பு, மருத்துவ உதவி, மனநல ஆலோசனை, காவல் உதவி, சட்ட உதவி, தற்காலிக தங்குமிடம் உணவு ஆகியவற்றை வழங்கி அவர்களை பாதுகாக்க சமூக நலத்துறையின் கீழ் "சகி"- ஒருங்கிணைந்த சேவை மையம் (OSC) செயல்படுகின்றது. அதில் பணிபுரிய கீழ்கண்ட நிலைகளில் ஒப்பந்த பணியாளர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர். அரியலூர் மாவட்டத்தில் கீழ்கண்ட அலுவலகத்தில் தங்கள் சுயவிவரங்களுடன் 03-12-2024 மாலை 5.45-ற்குள் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

1. பதவி - மைய நிர்வாகி- (Centre Administrator )

**பணியிடம் -1**

**கல்வித்தகுதி** -BSW & MSW (Counselling Psychology or Development Management, M.A Sociology)

**வயது வரம்பு** -21 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் இருக்க வேண்டும்.

**தகுதி** -5 வருடத்திற்கு மேலாக குடும்ப நல ஆலோசனையில் முன் அனுபவம் பெற்ற பெண் பணியாளராகவும் 24 மணி நேரம் சேவை அளிக்கும் வகையில் பணி அமர்த்தப்படும்.

**தொகுப்பு ஊதியம் ரூ.35,000/-**

1. பதவி - வழக்குப்பணியாளர் - (Case Worker )

**பணியிடம் -1**

**கல்வித்தகுதி** -BSW & MSW (Counselling Psychology or Development Management, M.A Sociology)

**வயது வரம்பு** -21 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் இருக்க வேண்டும்.

**தகுதி** -1 வருடத்திற்கு மேலாக குடும்ப நல ஆலோசனையில் முன் அனுபவம் பெற்ற பெண் பணியாளராக 24 மணி நேரம் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் பணி அமர்த்தப்படும்.

**தொகுப்பு ஊதியம் ரூ.18,000/-**

விருப்பம் உள்ளவர்கள் விண்ணப்ப படிவத்தினை அரியலூர் மாவட்ட இணையதளத்தில் **https://ariyalur.nic.in** பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும்.

நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய முகவரி:

**மாவட்ட சமூக நல அலுவலகம்**

**அறை எண்: 20, தரை தளம்**

**மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**

**அரியலூர்-621704.**

மாவட்ட ஆட்சித் தலைவர்
அரியலூர்.